**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 168** **நாள்: 14.11.2017**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 35 வார்டுகள் திறந்தவெளி கழிப்பிடமற்ற பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது – பொதுமக்கள் இதுகுறித்து கருத்து தெரிவிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய அரசு "சுவச் பாரத்" திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத திட்டம் (**O**pen **D**efecation **F**ree) செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், **14.03.2017** அன்று **46** வார்டுகள், **21.06.2017** அன்று **15** வார்டுகள், **16.08.2017** அன்று **54** வார்டுகள், **25.10.2017** அன்று **50** வார்டுகள் என மொத்தம் **165** வார்டுகள் திறந்தவெளி கழிப்பிடமற்ற பகுதிகள் என அறிவித்து பொதுமக்களிடம் கருத்து கேட்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தற்பொழுது, **35** வார்டுகள் திறந்தவெளி கழிப்பிடமற்ற பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிகளில் பணிபுரியும் அலுவலர்கள், சுயஉதவிக் குழுக்கள், தனியார் பகுதியில் எங்கும் திறந்தவெளியில் மலம் கழிப்பதில்லை என சான்றிதழ்களின் மூலம் அறிவிப்புகள் சமர்ப்பித்துள்ளார்கள். மேலும் அவர்கள் தங்கள் சொந்த வளாகத்தில் உள்ள கழிப்பறையையே பயன்படுத்துகிறார்கள். மேலும், கழிப்பறை இல்லாத குடும்பங்களில் தங்கள் வளாகத்தில் கழிப்பறை கட்ட போதிய இடம் இருக்கும் பட்சத்தில் மத்திய அரசு உதவியுடன் கழிவறை கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அல்லது தங்கள் வளாகத்தில் கழிப்பறை கட்ட போதுமான இடம் இல்லாத பட்சத்தில் அவர்கள் தங்கள் பகுதியிலிருந்து **500** மீட்டர் தூரத்திற்குள் உள்ள ஒரு சமுதாய கழிப்பறையை அணுகி உபயோகப்படுத்தலாம் என்ற நிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட மண்டலத்திற்குட்பட்ட வார்டுகள் திறந்தவெளி கழிப்பிடமற்ற பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

| மண்டலம் | கோட்டம் எண்கள் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | முகவரி |
|---|---|---|---|
| 1. திருவொற்றியூர் | 1, 2, 3, 4, 7, 9 | மண்டல அலுவலர்–1<br>94451 90001 | எண்.1947,<br>திருவொற்றியூர் நெடுஞ்சாலை,<br>சென்னை – 600 019. |
| 4. தண்டையார்பேட்டை | 37, 39, 41, 46, 47 | மண்டல அலுவலர்–4<br>94451 90004 | எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,<br>சென்னை–600 021. |
| 5. இராயபுரம் | 56, 60 | மண்டல அலுவலர்–5<br>94451 90005 | எண்.62, பேசின் பிரிட்ஜ் சாலை,<br>பழைய வண்ணாரப்பேட்டை,<br>சென்னை–600 021. |

| | | | |
|---|---|---|---|
| 6. திரு.வி.க. நகர் | 72, 73, 77 | மண்டல அலுவலர்–6<br>94451 90006 | எண்.5, ஆண்டர்சன் சாலை,<br>அயனாவரம்,<br>சென்னை–600 023. |
| 8. அண்ணாநகர் | 98 | மண்டல அலுவலர்–8<br>94451 90008 | எண்.36பி, இரண்டாவது குறுக்குத் தெரு,<br>புல்லா அவென்யூ,<br>செனாய் நகர்,<br>சென்னை – 600 030. |
| 11. வளசரவாக்கம் | 143, 144 | மண்டல அலுவலர்–11<br>94451 90011 | எண்.33, ஆற்காடு சாலை,<br>வளசரவாக்கம்,<br>சென்னை – 600 087. |
| 12. ஆலந்தூர் | 156, 157, 166 | மண்டல அலுவலர்–12<br>94451 90012 | எண்.1, புதுத் தெரு,<br>ஜி.எஸ்.டி. சாலை அருகில்,<br>ஆலந்தூர்,<br>சென்னை–600 016. |
| 13. அடையாறு | 171, 172, 173, 182 | மண்டல அலுவலர்–13<br>94451 90013 | எண்.115, டாக்டர்.முத்துலெட்சுமி சாலை,<br>சென்னை–600 020. |
| 14. பெருங்குடி | 169, 184, 188, 189, 191 | மண்டல அலுவலர்–14<br>94451 90014 | எண்.6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,<br>சென்னை–600 091. |
| 15. சோழிங்கநல்லூர் | 193, 196, 198, 200 | மண்டல அலுவலர்–15<br>94451 90015 | எண்.120, ராஜீவ் காந்தி சாலை,<br>(பழைய மகாலிங்கபுரம் சாலை),<br>சோழிங்கநல்லூர்,<br>சென்னை–600 119. |

இது குறித்து பொதுமக்களின் கருத்து மற்றும் குறைகள் நிவர்த்தனைகளை இவ்வறிவிப்பு வெளியிட்டு 15 நாட்களுக்குள் அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதன் பொருட்டு தேவை ஏற்பட்டால் பட்டியலில் குறிப்பிட்டுள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**